2002 மே 8]

ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது. அப்போது இராஜபாளையம் நகரில் 30 ஆயிரம் பேர்கள் இருந்தார்கள். தற்போது மக்கள் தொகை 2 இலட்சம் பேர்களாக உயர்ந்திருக்கிறது. கோடைக் காலங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. ஆகவே குடிநீர்ப் பிரச்சினையை முழுவதுமாகத் தீர்த்து வைத்திட அந்த நீர்த்தேக்கத்திற்குப் பக்கத்திலே ஒரு கூடுதல் நீர்த்தேக்கம் அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 312, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

312—

திட்டப் பணிகள்

***11348—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், பேராம்பட்டு ஊராட்சியை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் சேர்த்து இந்த ஆண்டு பணியைத் துவக்க அரசு திட்டம் தீட்டியுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஊராட்சி 2001-2002 ஆம் நிதி ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராம்பட்டு ஊராட்சியை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்து அந்தப் பணிகள் நடந்து வருகின்றன. இந்தத் திட்டத்தில் 20*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தெரு விளக்குகளுக்குத் திட்டம் தீட்டி 1.7 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மின்சாரத் துறைக்கு அனுப்பப்பட்டு, மின்சாரத் துறை இந்த போராம்பட்டு ஊராட்சியில் மின்கட்டணப் பாக்கி உள்ளதால், அந்தப் பணி துவங்காமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஊராட்சிக்கு ரூ.31 இலட்சம் ஒதுக்கீடு செய்து சில பணிகள்—சின்ன பேராம்பட்டு—தாதன் கொட்டாய் சாலை, கொய்யாலி வட்டம்— கீழ்மத்தூர் சாலை, சின்ன பேராம்பட்டு-காடயாம்பள்ளம் சாலை—பாதியிலேயே நிற்கின்றமையால் மேற்படி சாலைகளின் பணிகளை முழுமையாக முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து இந்த நிதி ஆண்டிலேயே முடித்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அறிந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 313, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

313—

தனி மாவட்டம்

***8066—திருமதி வி. சிவகாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தாராபுரம், பழனி, உடுமலைப்பேட்டை மற்றும் காங்கேயம் வட்டங்களை உள்ளடக்கி தனி மாவட்டம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திருமதி வி. சிவகாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,